…விக்

ஞானக் கட[வு]ள் விளக்க[ம்]

KOVILOOR MADALAYAM
KOVILOOR - 630 307
(NEAR) KARAIKUDI
(PHONE: -436846)

அண்ட கோளம்

விசாலம் நியமம் பொதுமை பயன் கார்யம்

அஸ்கமாத் இயற்கை சுபாவம் உட்சக்தி

ஆதி பரமன்

[விவரம் உள்ளே காண்க]

…ன் …றல் …டும். இவ் …தும் …க்கி …நம் …ர்ந்த …ரியன். …ண்டது …ஒரு விநாடி …ம் வருஷங்கள் …கள் நம்பூமியை …து பிரம்மாண்டம்,

Acc. No: 2069
R65

டி.த-கு. கண்…

விண்ணப்பம்

எல்லாம் வல்ல பரமனின் அருளால் நமது கழகத்தின்
ஐந்தாவது வெளியீடாக வெளியிடப் படுகிறது.
இவ்வைந்து வெளியீடுகளிலிருந்தே நமது வெளியீடு
கள் மிகச் சிறியவைபாயினும் எவ்வளவு நன்மை பயக்
கக்கூடுவன வென்பதைத் தமிழ் மக்கள் நன்கறிந்திருப்
பார்கள். இன்னும் வெகு விரைவில் அறிவுக்கு விருந்
தாகவும், மொழிக்கு அணிகலனாகவும் மிளிரக்கூடிய
பல நூற்களை வெளியிட வேண்டுமென்பது எமது
அவா. ஆகவே நமது கழகத்தின் சந்தாதாரர்களையும்,
வாசகர்களையும், தமிழ் மக்களையும் நாம் வெகுத் தாழ்
மையுடன் வேண்டிக் கொள்வதாவது :— தயவுசெய்து
இக் கழக அபிவிருத்தியை உங்கள் மொழிவிருத்தியாக
நினைத்து இன்னும் உமக்கறிமுகமான அனைவரையும்
எமது அங்கத்தினர்களாகச் சேர்த்துக்கொடுப்பீர்களாக.

விக்ஞானக் கடவுள் விளக்கம்

2069
R65

பரப்பு

பலவகைப் பெயர்கள், பலவகை உருவங்கள் கொண்டு மக்கள் பார்வைக்குத் தென்படும் இவ்வுலகம் யாது? மாபெரும் மலைகள், மிகவும் அகன்ற கடல்கள், எண்ணத் துலையாத மரவகைகள், நினைக்கமுடியா மிருக வகைகள், பார்க்கத் துலையாப் பறவை இனங்கள், மாளிட அறிவெல் லைக்குட்படாத பரந்த ஆகாயவெளியிற் பரவிக்கிடக்கும், மனிதனைக் கல்லாய்ச் சமைக்கும் சூர்ய, சந்திர, நக்ஷத் திரங்கள் முதலியவைகளைக்கொண்ட இவ்வண்டகோளத் தின் பரப்பை யார் உணரமுடியும்? நாம் வாழும் இவ்வுலகம் 25 ஆயிரம் மைல்கள் சுற்றளவுள்ளது. 5, 6 அடிகள் உயரமுடைய நாம் இமயம் போன்ற ஓர் பெருமலையின் அடியில் நின்று நம்மை அதனுடன் ஒப்பிட்டு நோக்கினல் அம்மலையின் விசாலம் நம் உள்ளத்தைக் கவர்ந்துவிடும். அதைப்போன்ற பல பெரியமலைகளைக் கொண்டது இவ் வுலகம். பெரிய சண்டைக் கப்பல்களைக்கண்டு வியக்கும் நாம் அக்கப்பல்கள் பலமாதங்கள் செல்லும் கடலைநோக்கி னல் வியப்படையோமா? இவ்வளவு பெரியதான நம் உலகத்தைப் போன்று 13 லட்சம் உலகங்கள் சேர்ந்த அவ்வளவுபெரியது காலையில் கிழக்கில் தோன்றும் சூரியன். அதைப்போல் பல சூரியர்களின் அளவைக்கொண்டது இரவில் மினுமினுக்கும் நக்ஷத்திரங்களிற் பல. ஒரு விநாடி யில் பல லட்சமைல்கள் வேகமாக, பல ஆயிரம் வருஷங்கள் பிரயாணம் செய்து சில நக்ஷத்திர ஒளிகள் நம்பூமியை அடைகின்றன. எனவே உலகம் அல்லது பிரம்மாண்டம்,

மனிதர் இருதயத்துடிப்பையும் நிறுத்தவல்லப் பேரு பெருவிடம் கொண்டது.

நியமம்

நல்ல விதை, தகுந்த நிலத்திலிட்டுப், போதுமான நீ பாய்ச்சப்பெற, முதலில் தளிர்த்து, இலைவிட்டு பூ, பிஞ்சு காய், கனிகளை முறையே தோற்றுவிக்கிறது. அதுவு எவ்விதையைப் புதைத்தோமோ அவ்விதைக் குறியதே தோன்றுகிறது. மாவிதையிலிருந்து கொய்யா, பனையி லிருந்து தேங்காய் ஒருபோதும் எங்கும் தோன்றாது. ஜீவராசிகள் பால்யமாகப் பிறந்து, யௌவனத்தை யடைந்து, பிறகு கிழப்பருவத்தை யடைகின்றன. எந்த ஜீவனும் கிழமாகப் பிறந்து பால்யத்திற்குக் குறைந்து வருவ தில்லை. எனவே இவ்வுலகக் காரியங்கள் அனைத்தும் ஓர் நியமத்திற் குட்பட்டு நடக்கின்றன. நியமம் மாறி நடை பெறுமானால் உலகில் யாரும், எப்போதும், எக்காரியத்தை யும் செய்யமுடியாது. காலையில் சூரியன் கிழக்குப்பக்கம் உதிக்கும், என்ற நியமம் எப்போதும் மாறுவதில்லை. மலை களில் தோன்றும் நதிகள் கடல்களை நோக்கிப்பாய்ந்து செல்வது ஏன்? இமயத்தில் தோன்றும் நதிகள் திபேத் தில் பாயாமல் இந்தியாவில் என் பாயவேண்டும்? தீவுகள் ஏன் இருக்கின்றன? எல்லாம் ஓர் நியமத்திற்குட்பட்டுத் தான். கம்பளம் சூட்டைக் கொடுக்குமென்ற நியமம் இருப்பதாலேயே குளிர்காலத்தில் போர்த்துக்கொள்கி றோம். உண்டால் பசிதீரும் என்ற நியமம் இருப்பதா லேயே பசித்தபோது உண்கிறோம். இந்த நோய் இதனால் தான் உண்டாகும் என்ற நியமம் இருப்பதாலேயே வைத் திய சாஸ்த்திரம் உள்ளது. இந்நியமங்கள் ஒருபோதும் மாறுவதில்லை. மாறுவதாக நாம் நினைப்பதெல்லாம் அம் மாறும் நியமத்தை நாம் முதலில் அறியாமலிருந்ததே யாகும். ஓர் இடத்தில் திடீரெனப் பூகம்பம் உண்டானால் அங்கு பூகம்பம் உண்டாகக் கூடிய சாதனங்களனைத்தும்

இருந்தன என்பதே பொருளன்றி பூகம்ப நியமத்திற்கு மாறுபட்டு, சாதனங்களில்லாமல் உண்டாயிற்று என்பதல்ல. கிரஹணம், சந்திர, சூர்ய உதயமாதிகளை அறிந்து சொல்வதும் அவைகள் ஓர் நியமத்திற்குட்பட்டுக் காரியங்களைச் செய்து வருவதாலேயே. ஆகவே உலகமும் அதன் காரியங்களும் நியமத்துக் குட்பட்டவைகள்.

பொதுமை

பல உருவ நிலைகளில் உலகப் பொருள்களும் காரியங்களும் வேற்றுமை கொண்டிருந்தாலும் இவ்வனைத்திலும் ஓர் ஒற்றுமை (பொதுத்தன்மை) உண்டு. மனிதன், பறவை, மிருகம் என்பன பலவேற்றுமைகள் கொண்டவையாயினும் உண்ணல், பிறத்தல், இறத்தல் என்ற பலகாரியங்களில் ஒற்றுமை உடையன. மாமிசம், ரத்தம், எலும்பு, தோல் என்ற பலவகைத் தாதுக்களும் உடலின் பொதுமையில் ஒக்கும். வீடு, ஆலயம், அரண்மனை, சத்திரம், குடிசில் என்ற பலதும் கட்டடம் என்ற பொதுமையில் அடங்கும். இதேபோல் உலகம், சூர்யன், சந்திரன், நக்ஷத்ரங்கள் என்பனவும் ஓர் பொதுமையில் அடங்கும். இதனுலேயே இவ்வண்டகோளத்தை ஆங்கிலத்தில் யூனிவர்ஸ் (universe) ஒன்றுனதன்மை கொண்டது என்று சொல்கிருர்கள். உலகம் ஓர் போதுத்தன்மை கொண்டது.

பயன்

பல நாம, ரூப பேதங்களுடன் தென்படும் இவ்வண்டகோளத்தின் எல்லாப் பொருள்களும், காரியங்களும் ஓர் பயனை நாடியே நடைபெறுகின்றன. சிற்றறிவு படைத்த மனிதன் அப் பயன் இன்னதென்று தெரிந்துகொள்ள முடியாமலிருக்கலாம். அவனுக்கு அது பயனளிக்காத வரையில், மற்றவைகளுக்குப் பயனுவதை அவன் பயனுடையதென்று நினைக்காமலிருக்கலாம். ஆனுலும் அண்ட

கோளம் ஓர் பயனை நாடியே அமைக்கப்பட்டுள்ளது. யந்திரத்தின் தன்மை அறியா ஒருவனுக்கு அதன் பல பாகங்களின் உபயோகம் தெரியாமையால் அவைகளை வீணென நினைக்கலாம். ஆனால் அதை அமைத்த பொறியாளன், யந்திரத்தின் ஒவ்வொரு சிறிய அவயவத்தையும் ஓர் பயனை நாடியே அமைத்திருப்பான். ஓர் சிறிய மலர், மனிதன் கண்களுக்குத் திருப்தியையும், மூக்கிற்கு வாசனையையும், வைத்தியருக்கு மருந்தையும், சித்திரக்காரருக்குக் கலையையும், சாயக்காரருக்கு நிறத்தையும், கவிஞனுக்குக் கற்பனைத் திறனையும், வண்டுகளுக்கு இன்பத்தையும், ஈக்களுக்குத் தேனையும், வெட்டுக்கிளிகளுக்கு விளையாடுமிடத்தையும் அளிப்பதாய் விளங்குவதன்றி தான் பிறந்த செடியின் குல விருத்திக்கான விதைகளையும் கொடுக்கிறது. ஒருவருக்கு உபயோகமில்லாத ஒன்று மற்றொருவருக்கு உபயோகமாகிறது. ஒரு காரியத்திற்கு உதவாத பொருள் மற்றோர் காரியத்திற்கு உதவுகிறது. ஒருபொருளுக்கு அழிவைப்பயக்கும் காரியம் மற்றோர் பொருளுக்கு ஆக்கம் பயக்கிறது. ஆகவே உலகமானது பயனுடைத்தானது.

தோற்றம்

உலகமே காரியரூபம், என்றால் ஆக்கப்பட்டது. உலகத்திற்குக் காலம் உண்டு. உலகின் எல்லாப்பொருள்களும் யாதோ ஒருசமயத்தில் தோன்றியவைகள். மிகப் பழைய ஓர் மரத்தை எடுத்துக் கொண்டால் அது ஓர் சமயம் தோன்றித்தானிருக்கவேண்டும். மனிதர்களனைவரும் காலவரம்புக்குட்பட்டுத் தோன்றியவர்களே. உலகின் மிகப்பெரிய இமயமலையும் ஓர் சமயத்தில் தோன்றியதே. நிலப்பரப்புகள், ஆறுகள், கடல்கள் அனைத்தும் ஓர் சமயத்தில் தோன்றியவைகளே. சூர்யன், சந்த்ரன், நக்ஷத்திரங்களும் ஓர் சமயத்தில் தோன்றியவையே. இதைக்குறித்து விஞ்ஞானம் சொல்வதைக்கவனிப்போம்:-

KOVILOOR MADALAYAM
KOVILOOR - 630 307
CHETTINAD KARAIKUDI

"உலகம் தோன்றுவதற்குமுன் ஓர் மிக சூக்ஷ்மமான த்ரவ ரூபப்பொருள் ஆகாயத்தில் பரவியிருந்தது. சூர்ய, சந்திர, நக்ஷத்திரங்கள் யாதும் இருக்கவில்லை. பிறகு இத் திரவப்பொருள் ஒன்று சேர்ந்து இறுகத் துடங்கியது. இவ்விறுக்கத்தால் பல கோளங்கள் தோன்றி வேகமாய்ச் சுற்றத்துடங்கின. இவ்வேகத்தால் கோளங்களிலிருந்து சிறுசிறு பொரிகள் வெளிப்பட்டன. அச்சிறு கோளங் களும் தங்கள் எல்லையில் சுற்றலாயின. அப்படிப்பட்ட ஓர் பொரிதான் நாம் வாழும் இவ்வுலகம். இது முதலில் உருகிய நெருப்பு உருண்டையாயிருந்து சிறிதுசிறிதாக ஆறி, நீர், நிலம், தாவரம், உயிர்வாழ்வன முதலிய பாகுபாடு களாகத் தோற்றமுற்றது." ஆகவே இவ்வுலகமும் இத னுள் இருக்கும் எல்லாப் பொருள்களும் ஓர் சமயத்தில் தோன்றினவையே.

மூலம்

உலகம் அணுக்களின் கூட்டுறவாலானது. சுடுதல், அறுத்தல் முதலான காரியங்களால் இவ்வுலகிலுள்ள எல்லாப்பொருள்களையும் அணுக்கள் நிலைக்கு மாற்றலாம். ஓர் பொற்கட்டியை இரண்டாகப் பிளப்போம், மறுபடி அவ்விரண்டு துண்டுகளையும் இரண்டிரண்டாகவும், அதை மறுபடி இரண்டாக இப்படியே பிளந்து கொண்டேசென் றால் இனிபிளக்க முடியாதென்ற நிலைக்கு அது சிறு துண்டுகளாக மாறும். பெரும் மரத்தைச் சுடுவோம், கரி யாகும், மறுபடி சுடுவோம், சாம்பலாகும், மறுபடி சுடுவ தால் சாம்பலும் இல்லாது எல்லாம் அணுக்களாகமாறி விடும். இதேபோல் உலகனைத்தையும் மாற்றிக்கொண்டு சென்றால் இனி எவ்வகையாலும் மாற்றமுடியாத ஓர் நிலையில் உலகம் பரமசூக்ஷ்மமான அணுக்கள் நிலைக்கு மாறும். இதையே அண்டகோளம் தோன்றக் காரணமா

யிருந்த மூலதத்துவம், மூலப்ரக்ருதி என்றெல்லாம் சொல்லப்படுகிறது. ஆகவே உலகம் மூலதத்துவமாம் சூக்ஷ்மதம அணுக்கள் நிலையிலிருந்து மாறியநிலை என பெறப்படுகிறது.

காரியம்

அண்டகோளம் அணுக்களால் ஆனது. ஆதல் என்ற நிலைக்குட்பட்டது காரியம். என் ஆயிற்று? என்ற கேள்விக்குக் கிடைக்கும் பதில் காரணம். காரணத்தால் ஆனது காரியம். களிமண் குடம் ஆயிற்று. என் ஆயிற்று? குயவன் செய்ததால், ஆகவே செய்ததால் என்பது காரணம். செய்ததால் என்ன ஆயிற்று? குடம் ஆயிற்று. ஆகவே குடம் காரியம் குடத்தைச் செய்ததுயார்? குயவன். குயவன் கர்த்தா. காரியத்தைச் செய்தவன் கர்த்தா. கர்த்தாவால் செய்யப்பட்டது காரியம். எதனுல் செய்யப்பட்டதோ அது காரணம். உலகம் ஆக்கப்பட்டது. ஆகவே உலகம் காரியம். எதனுல் ஆக்கப்பட்டது? அணுக்களின் சேர்க்கையால் ஆகவே அணுக்கள் சேர்ந்தது காரணம். ஏன் அல்லது யாரால் அணுக்கள் சேர்ந்து உலகமாயிற்று? என்ற கேள்விக்குக் கிடைக்கும் விடை கர்த்தா. உலகத் தோற்றத்திற்குக் கர்த்தா உண்டா? இல்லையா? என்பதைப் பார்ப்போம்.

காரணம்

இதுவரை யாம் கூறியதிலிருந்து, இவ்வண்டகோளம், மூலதத்துவமெனும் மிகச் சூக்ஷ்மமான அணுக்களின் சேர்க்கையால் ஆக்கப்பட்டதென்றும், அப்படி ஆக்கப்பட்ட இவ்வுலகம் மிகவிசாலமான, பெரியதானதென்றும், நியமத்திற்குட்பட்டதென்றும், பல ரூபங்களாயிருந்தாலும் ஓர் பொதுமையைக்கொண்ட தென்றும், பயனைக் கொண்டே பலரூபங்களாக மாறியிருக்கிற தென்றும்,

இதற்குத் தோற்றக்காலம் இருந்தது என்றும், உலகம் காரிய ரூபமானதென்றும் விளங்கியிருக்குமென நம்புகிறோம். இப்போது, அணுக்கள் தன்முதல் நிலையிலிருந்து என் அல்லது எதனால் இறுகத்துடங்கி—ஒன்று சேரத் துடங்கி—உலகமாக மாறியது? என்பதற்கு விடையாராய்வோம். இதற்கு அகஸ்மாத்தாகச் சேர்ந்தது, இயற்கையாகச் சேர்ந்தது, ஸ்வபாவமாகச் சேர்ந்தது, தானாகச் சேர்ந்தது, அணுக்களில் இருக்கும் சக்தியால் சேர்ந்தது. கடவுளால் சேர்ந்தது என்ற பல விடைகள் இன்று மக்களால் கூறப்படுகின்றன. ஒவ்வொன்றையும் முறையே சீர்தூக்கிப் பார்ப்போம்.

அகஸ்மாத்

"உலகில் பல காரியங்கள் காரணங்களில்லாமலே திடீரென்று நடைபெறுகின்றன. இதேபோல் மூலதத்துவம் அகஸ்மாத்தாக ஒன்றுசேர்ந்து உலகமாகியது" என்கின்றனர். "நான் வேறு வேலையாகச் சென்றுகொண்டிருந்தேன். நான் எதிர்பாராதவாறு கோபாலன் என்னைச் சந்திக்கிறான். அவனும் வேறு ஏதோ காரியமாகத்தான் சென்று கொண்டிருந்தான். எங்கள் சந்திப்பிற்கு என்ன காரணம் இருக்கக்கூடும்? இது தான் அகஸ்மாத்" என்பது அவர்கள் வாதம். ஆனால் உண்மையில் கூர்ந்து பார்த்தால் இச்சந்திப்புக்கும் காரணம் கட்டாயம் தெரியும். முதலவனும், கோபாலனும் குறித்த சமயத்தில் வீட்டிலிருந்து புறப்படல், குறித்த வழியில் வரல், குறித்த இடத்தில் ஒருவரை யொருவர் பார்த்தல் என்ற பல காரணங்கள் ஒன்றுகூடியே சந்திப்பு என்ற காரியம் நிகழ்ந்தது. ஆகையால் அகஸ்மாத் என்பது காரணத்தைக் கொண்டே இருக்கிறது. ஆகவே மூலதத்துவ அணுக்கள் அகஸ்மாத்தாகக் கூடியதென்பது தனித்தனி இரண்டணுக்களை

இரண்டு காரணங்கள் இயக்க ஒன்றுகூடியதென்று பொருளாகும். மூலதத்துவத்தை ஒன்றுகூடச் செய்த அக் காரணத்தைக் கடவுளாகக் கொண்டால் அகஸ்மாத் வாதிகள் ஒரு கடவுளுக்குப் பதில் பல கடவுள்களை நம்புகின்றனர் என்றாகும். ஆகவே காரணமில்லாது அகஸ்மாத்தாக ஒன்றும் நடைபெறுவதில்லை. பல காரணங்களின் சேர்க்கையால் நடைபெறும் காரியத்தையே அகஸ்மாத் என்கின்றனர். ஆகவே மூலதத்துவத்தை இயக்கியது எது? அல்லது மூலதத்துவம் ஏன் - எக்காரணத்தால் - இயக்கியது? என்பது இதனால் விளங்கவில்லை.

இயற்கை

"உலகின் காரியங்களனைத்தும் இயற்கையாய் நடைபெறுகின்றன. மலை தோன்றியது, கடல் நீர் கொண்டது, சூர்ய சந்திரன் உண்டானது எல்லாம் இயற்கையால். மூலதத்துவம் உலகமாக மாறியதும் இயற்கையால்" என்கின்றனர். இயற்கை என்று நீங்கள் எதற்குச் சொல்கிறீர்கள்? அணுக்கள் ஒன்றுசேரக் காரணமாயிருந்த அறிவுச் சக்தியையா? அப்படியானல் இதற்குத்தான்—அணுக்களில் புகுந்து உலகமாக மாற்றியதைத்தான்-மற்றவர்கள் கடவுள் என்கின்றனர். ஆகவே இங்கே சப்த வேற்றுமையே ஒழிய கருத்தில் வேற்றுமை காணப்படவில்லை. ஆனல் இயற்கை என்பதை சிருஷ்டி நியமத்திற்குச் சொல்வீர்களானல் அது பெருந் தவறாகும். ஏனென்றால் நியமம் கர்த்தாவல்ல, கர்த்தாவால் நியமிக்கப் படுவது நியமம். வியாபார நியமங்கள் வியாபாரிகள் அல்ல. வியாபாரிகளால் வியாபாரத்தின் தன்மையைநாடி நியமிக்கப் படுவதுதான் வியாபார நியமம். ஒருவன் இறந்தான், ஏன் இறந்தான்? என்று கேட்டால் இருதயம் நின்றுவிட்டதால், என்று பதில் கூறுவது தவறு. ஏனென்றால் இருதயம் நிற்பதுதான் மரிப்பது. ஆகவே கேள்விக்கு விடை மரித்தல் அல்லது இறத்தல் என்பதற்குக் காரணத்தைதான் கூறவேண்டும். எனவே சிருஷ்டி

ஸ்வபாவம்

“ மயிலின் தோகையில் நிறம், குயிலின் குரலில் இனிமை, நெருப்பில் சூடு, நீரில் குளிர்மை ஸ்வபாவமாகவே இருப்பதைப்போல் மூலதத்துவ அணுக்கள் ஸ்வபாவமாகவே ஒன்றுசேர்ந்தன. அவைகளை ஒன்றுசேர்க்க யாதொன்றும் தேவையில்லை ” என்கின்றனர். இவ்வுலகம் பல வேறு தன்மைகளைக்கொண்ட பல வேறு பொருள்களையுடைத்தாயிக்கிறதே, இவைகள் எல்லாமும் அணுக்களின் ஸ்வபாவச் சேர்க்கையால் உண்டானதென்றால் அணுக்கள் அனைத்தும் ஒரே ஸ்வபாவம் கொண்டவைகளா? வேறு வேறா? ஒரே ஸ்வபாவம் கொண்டதாயின் பல வேறு தன்மை கொண்ட பொருள்களாய் அவைகள் சேர்ந்திருக்க முடியாது. பல ஸ்வபாவங்களைக் கொண்டதாயின் உலகில் நாம் முன்பு நிரூபித்த பொதுத் தன்மை இருக்கமுடியாது. ஒன்றோடொன்று சேரும் ஸ்வபாவம் கொண்டதாயின் எப்போதும் சேர்ந்த நிலையிலேயே இருக்குமன்றி பிரிவுறாது. பிரியும் ஸ்வபாவம் கொண்டதாயின் ஒருபோதும் சேராது. பிரியவும், சேரவும் இரு ஸ்வபாவமும் கொண்டதாயினும் சேரமுடியாது, ஏனென்றால் சேரும் ஸ்வபாவத்தால் ஒன்று சேரவரும்போதே பிரியும் ஸ்வபாவத்தால்சேராமுன் பிரிந்துவிடும். அன்றி இல்வுலகில் எப்பொருளும் தானாகச் சேர்வதையோ, பிரிவதையோ யாரும் எப்போதும் கண்டதில்லை. உதாரணமாகத் தண்ணீரை யெடுத்துக் கொள்வோம். அது கரியமலவாயு, ப்ராணவாயு என்ற இரண்டு வாயுக்களின் சேர்க்கையால் உண்டானது. ஜலமாக மாறும் ஸ்வபாவம் இல்விரண்டு வாயுக்களுக்கு மிருக்கின்றதினால்தான் அவைகள் தண்ணீராக மாறுகின்றதானாலும், அவைகள் தானாகச் சேர்ந்து அப்படி மாறுவதில்லை. ஏன் என்றால் அபபடிச் சேரும் ஸ்வபாவமு மிருக்குமானால்

உலகில் தண்ணீராகச் சேராத நிலையில் அவ் வாயுக்கள் இருக்க முடியாது. ஆகவே தண்ணீராகும் ஸ்வபாவம் இருந்தாலும் அதை சேர்த்து அப்படி ஆக்க ஓர் கர்த்தா அல்லது காரணம் வேண்டும். நீராவியாக மாறும், ஐஸ் கட்டியாக மாறும் ஸ்வபாவம் தண்ணீருக்கு இருந்தாலும், தானாக அந்நிலைக்கு மாறாது. சூடு, குளிர்மை என்ற தன்மைகள் அவைகளுக்குச் சம்பந்தப் பட்டால் அச்சுபாவத்தைக்கொண்டு நீர், மாறுதலடையும். களிமண்ணிற்குக் குடமாகும் ஸ்வபாவமுண்டு மணலுக்கு இல்லை. ஆனால் குயவனால் ஆக்கப்படாதவரை களிமண் தன் ஸ்வபாவத்தைக்கொண்டு மாத்திரம் குடமாக ஆகிவிடாது. ஆகவே, உலகமாக மாறும் ஸ்வபாவம் மூலதத்துவ அணுக்களுக்கு இருந்தாலும் அவைகள் தானாகச் சேர்க்கையுற்று உலகமாக மாற முடியாது. பின் எதனால் அப்படியானது ?

தானாகச் சேரல்

"மூலதத்துவ அணுக்கள் காரணமில்லாமலே தானாகச் சேர்க்கையுற்று உலகமாக மாறியது"! என்கின்றனர். இவ்வுலகில் எந்தச் சிறுகாரியமும் தானாக நடைபெறுவதில்லை. காரியத்திற்கு வேண்டிய சாதனங்களனைத்தும் நிறையப்பெற்றிருப்பினும், காரணம் ஓர் கர்த்தாவால் பொருந்தச் செய்யப்படாதவரை எக்காரியமும் நடைபெறாது. அரிசி, தண்ணீர், அடுப்பு, நெருப்பு, சமயற்காரன் எல்லாம் தனித்தனியே இருந்தாலும் சமையல் ஆகாது. தானாக நெருப்பு அடுப்பில் வந்து, அரிசி நீரில் விழுந்து, அடுப்புமேலேறி பக்குவமானபின் இறங்கிவிடாது. தமிழ் மொழியின் எழுத்துக்கள் எவ்வளவோ காலமாக இருந்தும், கம்பர் ஆக்காதவரை அவைகள் சேர்ந்து ராமாயணச் செய்யுட்களாய் ஆகவில்லை. சூர்யன் போன்ற ஓர் பெரும் நெருப்புக் கோளம் தானாகச் சேர்ந்த அணுக்கள் கூட்டுறவால் ஆகியிருந்தால், அதற்குப்பின் அதே அணுக்களின் சேர்க்கையால் ஒரு சிறு தீபமும் ஆகவில்லையே, ஏன்? இறந்த உடல் தானாக

உயிர் அணுக்களின் சேர்க்கை பெற்று ஏன் எழுவதில்லை? உடலுக்கு வேண்டிய அணுக்கள் உலகிற் பரந்து கிடந்தாலும் ஆண்பெண் சேர்க்கையின்றித் தானாக ஏன் மனிதர்கள் தோன்றுவதில்லை? ஆகவே அணுக்கள் தானாகச் சேர்க்கை ஒருபோதும் உறாது. சேர்த்து வைக்கும் ஒன்று கட்டாயம் இருந்தே தீரவேண்டும். அது யாது?

அணுக்களில் இருக்கும் சக்தி

"மூலதத்துவ அணுக்களில் ஓர் சக்தி பரவியிருந்தது. அதனால் அணுக்கள் சேர்க்கையுற்று உலகமாக மாறியது" என்கின்றனர். அணுக்களில் பரவியிருந்த சக்தியால் அணுக்கள் சேர்க்கை கொண்டிருக்குமாயின், சேர்க்கை கொள்ளத் துடங்குவதினமுன் அச்சக்தி அணுக்களில் இருந்து என்ன செய்துகொண்டிருந்தது? அணுக்களுக்குள் அச்சக்தி இருந்தும் அவைகள் வெகுகாலம் வரையில் ஏன் சேராமல் இருந்தது? பின் ஏன் சேரத்துடங்கியது? ஆகவே அணுக்களில் யாதோ ஒரு சக்தி பரவியிருந்தபோதிலும் அதைத் துடக்கிவைக்க மற்றோர் அறிவுச் சக்தி இருந்தே யாகவேண்டும்? அது எது?

விஞ்ஞானம்

"மூலதத்துவ அணுக்களின் கூட்டுறவால் சூர்ய, சந்த்ர, நக்ஷத்திர, உலகம் தோன்றியது. உலகின் திரவரூபம் ஆறி, நீராகவும், நிலமாகவும் பிரிந்தது. நீரில் பாசி, பாசியில் சிறு நீர்ச்செடிகள், அதிலிருந்து பெரும் பெருஞ் செடிகள், அதிலிருந்து சிறு நீர்ப்பிராணிகள், அதிலிருந்து பெரு நீர்ப் பிராணிகள், அவைகளிலிருந்து தரையில் ஊரும் பிராணிகள், அதிலிருந்து பறவைகள், விலங்குகள், மீன், மனிதர்கள் ஆக இவ்வுலக மாறுபாடு ஆயிற்று" என்று கூறும் விஞ்ஞானிகள் கூற்று உலகின் தோற்ற முறைகளைக் கூறுவதன்றிக் காரணத்தை, கர்த்தாவைக்

கூறுவதல்ல. "கடிகாரத்தைச் செய்தது யார்?" என்று கேட்டால் "முதலில் மண்ணிலிருந்து இரும்பெடுத்து, உருக்கிப் பல் சக்கிர, முட்கள்செய்து, அதன் இணைப்பால் கடிகாரமாயிற்று" என்று கூறுவது தவறு. ஏனென்றால் இது கடியாரம் செய்யப்பட்ட முறையன்றி கடியாரத்தைச் செய்த கர்த்தாவைச் கூறுவதல்ல. ஆகவே விக்ஞானம் உலகத் தோற்றமுறையைக் கூறுவதன்றி, அதற்குக் காரணத்தையோ, கர்த்தாவையோ கூறுவதல்ல. தண்ணீர் ப்ராண, கரியமலவாயுவின் சேர்க்கையால் ஆனது என்று தான் விஞ்ஞானம் கூறுகிறதன்றி அச்சேர்க்கையால் ஏன் தண்ணீர் உண்டாகிற தென்றோ? அப்படிச் சேர்த்து உண்டாக்கியது யார்? என்றோ கூறுவதல்ல.

இதுவரை யாம் கூறியதாவது:—பல உருவக் காரியங்களாகக் காணப்படும் இவ்வண்டகோளம் விசாலம், நியமம், பொதுமை, பயன், தோற்றக்காலம், கார்யம் எனும் தன்மைகளுக்கு உட்பட்டது. ஆதியில் மிகமிகச் சூக்ஷ்மமாய் இருந்த மூலதத்துவமெனும் அணுக்களின் சேர்க்கையால் ஆனது. அம்மூலதத்துவ அணுக்களின் சேர்க்கை அகஸ்மாத்தாகவோ, இயற்கையாகவோ, ஸ்வபாவமாகவோ, தானாகவோ, தன்னுள்ளிருந்த சக்தியாலோ, ஒன்று சேர்ந்து இந்நிலையை எய்தியிராது. சாதாரணமாக விக்ஞானமும் உலகின் முறையைக் கூறுகின்றதன்றி காரணத்தைக், கர்த்தாவைக் கூறுவதில்லை. இதுவரை அறிந்த பிறகு மூலதத்துவ அணுக்கள் எதனால், யாரால் சேர்க்கப்பட்டிருக்கவேண்டுமென்பதை ஆராய்வோம்.

எந்தக் காரியமும் காரணமில்லாமல் நிகழ்வதில்லை. காரணம் மாத்திரம் இருந்தாலும் அது தானாகக் காரியத்தை நிகழ்விக்காது காரணம் பொருளிற் புகுந்து காரியத்தை ஆக்க ஓர் விருப்பம் வேலைசெய்யவேண்டும். விருப்பம்தான் காரணத்தைக் காரியத்தில் இயக்கும். ராமன் வீட்டுக்கு வந்தான். ஏன்? வரவேண்டுமென்று விரும்பிய

தால். பசு உணவருந்தியது. ஏன்? அருந்த இச்சித்த தால். சாதாரணக் காரியங்களின் விருப்பத்தை எளிதில் கண்டு பிடித்துவிடலாம். மனித சக்திக்கும், அறிவுக்கும் எட்டாத காரியங்கள் எதன் விருப்பத்தால் நேர்ந்த தென்று அறிவது மிகக் கடினம். உலகம் நியமத்திற் குட் பட்டதென்று கூறினேம். நியமிப்பவன் ஒருவன் இருந் தால் ஒழிய நியமங்கள் காப்பாற்றப்படமாட்டா. தோன்ற வும்—இருக்கவும்—மாட்டா. வியாபார நியமங்கள் வியா பாரிகள் இருக்கவே இருக்கும். யந்திர நியமம் யந்திரக் ஞனல் நியமிக்கப்பட்டது. ஆகவே இவ்வுலக நியமத்திற் கும் ஓர் நியமிப்பாளன் இருக்கவேண்டும். நியமங்களும் நியமிப்பாளர்களின் விருப்பத்தாலேயே நியமிக்கப்படும். எதற்காக நியமங்களை நியமிப்பாளர் வகுத்தாரோ அவர் அப்பொருள்களின் தன்மைகளை அறிந்தவராக இருக்க வேண்டும். இல்லையேல் பொருள்கள் நியமத்திற்குட்பட மாட்டா. அன்றி அதனல் அழிவு நேரிடும். வியாபார நியமத்தை வியாபாரத் தன்மை. முறைகளை அறிந்தவரே நியமிக்க முடியும். சித்திரக்காரர் வியாபாரத்திற்கு விதிகளை வகுக்க முடியாது. வியாபாரி, யந்திரங்களுக்கு விதிகளை வகுக்க முடியாது. சித்திரக்காரர் வியாபாரத்திற்கு நிய மம் வகுத்தால் வியாபாரம் அழியும். அன்றி நடைபெருது, ஆனல் சித்திரக்காரரும் வியாபாரத்தன்மைகளை அறிந் திருந்தால் அப்போது அவர் வகுக்கலாம். அது செவ் வனே நடைபெறும்.

இவைகளிலிருந்து, இவ்வண்டகோளத்தை, அதன் மூலதத்துவ அணுக்கள் நிலைமையிலிருந்து ஆக்க ஓர் பூர்ண அறிவுகொண்ட (அறிவில்லாமல் நியமிக்க முடி யாதாகையால்) சக்தி, கடவுள் (வேறு என்ன பெயர் வேண்டுமென்ருலும் சூட்டிக்கொள்ளலாம். பெயரால் சச்சரவில்லை, கருத்தேவேண்டும்,) இருக்கவேண்டும் என் றும், அதன் அல்லது அவரின் விருப்பத்தாலேயே, இச்சை

யாலேயே இவ்வண்டகோளம் ஆக்கப்பட்டிருக்கவே
என்றும் நிச்சயமாக விளங்குகிறது.

மனிதர்கள் தங்கள் ஆதிகாலத்திலிருந்து கு
மாய்ச் சேர்ந்தே வாழ்ந்து வந்திருக்கிறார்கள். ஆதிக
மக்களிலிருந்து இக்கால விஞ்ஞான முதிர்ச்சியடைந்த
கள் வரை எல்லா மனித சமயங்களிலும் இச்சட உலகம்,
சடமல்லாத ஓர் திறமை, அறிவுகொண்ட சக்தியால் ஆக்
கப்பட்டிருக்க வேண்டும் என்ற அறிவு விளங்கி யிருக்
கிறது. இவைகளைக் குறித்தும், அக்கடவுளின் குண
குணங்களை, தன்மைகளை மனிதர்கள் எப்படி அறிகிறார்
ளென்றும், கடவுளை வழிபடல் என்றால் என்ன என்று
வழிபடுவதால் என்ன பயன், வழிபடாவிட்டால் என்ன
ஆகும் என்றும் இவ்வெல்லா விவரங்களையும் யாம் ம
றோர் நூலில் ஆராய்வோம்.

சட உலகைத் தன் விருப்பால் ஆக்கியவர் கடவுள்.

2069
R65
KOVILOOR MAL
OR-63
KARA

Printed at the Chithra Printing Works, 96, China Bazar, Madras

விவரப்போகும் அரி

ச்சடங்கும் உலக சமுதாயமு

மணம் செய்யும்போது சடங்குகள் தேவையா? என்பதை மனித சமுதாயத்தின் வளர்ச்சியுடன் ஒப்பிட்டுக்கூறும் நூல் கலியாணச் சடங்குகளின் கருத்துகள், இதில் விளங்கும்.

னதின் மாண்பும் மனிதனின் மாட்சியும்:—

மனம் என்பது என்ன? அது எப்படி வேலை செய்கிறது? அதைக் கட்டுப்படுத்துதல் என்றால் என்ன? அதனால் மனித னுக்கு என்ன நன்மை? முதலிய மனோதத்துவங்களைச் செவ் வனே விளக்குவது.

லிவுதரும் உணவுமுறைகள்:—

சாதாரணமாகக் குடும்பத்தில் உபயோகிக்கும் பொருள்களைக் கொண்டே சிறந்த வலிவுதரும் பண்டங்களைச் சமைத்துண் ணும் முறைகள் இதில் கூறப்பட்டுள்ளன.

ஈஜிப்ட் வாசிகள் பாண்டியர்கள்:—

ஆங்கில சரித்திரக்காரர்கள், உலகில் மிகப் பழையதென்று சொல்லும் ஈஜிப்ட் நாகரிகம் பாண்டிய நாகரிகமென்பதை யும், அந்நாட்டு மக்கள் தமிழ் நாட்டின் பாண்டியர்களே என் பதையும் இந்நூலில் ஆதாரத்துடன் கூறப்பட்டிருக்கிறது.

தமிழ்மொழியின் தனிப்பெருமை:—

மற்றமொழிகளிற் காணமுடியாத, தமிழுக்கே உரி சிறப்புகளும், புழங்காலத்தில் தமிழ்மொழி அடைந்த பெருமையும் இதில் காணலாம்.

உலகின் முதன்மொழி.—

இன்று உலகில் பல்லாயிரம் மொழிகள் பேசப்பட இவையனைத்தும் ஆதியில் ஒரே தாய்மொழியிலி தோன்றினவே என்பதையும், அத்தாய்மொழி இன்ன றும் இதில் தகுந்த மேற்கோள்களுடன் விளக்கப்பட்டு

ன்னெறி நூற்கழகம், சென்

... இவ்வண்ட கோல்களின் சிறப்பு :—ருக், யஜுர், சாம, அதர்வ என்ற பாகுபாடு கொண்ட வேதத்திற் பொதிந்து கிடக்கும், மனிதப் பொதுநல விருப்பம், நீதி நெறி, குடும்பப்பாதுகாப்பு முதலிய சிறந்த விஷயங்களைத் திரட்டி வெளியிட்டுள்ளது.

வெளியீடு 2 :—மரங்களின் மகிமை அல்லது மனிதனின் முதற் கடவுள்:— மாரியம்மை, கன்னிமேரியும், கிருஸ்துவும், சிலுவை, முகூர்த்தக்கால், பொங்கல் பண்டிகை, நடுவீட்டுப் பூசை, காதல் மணம் முதலிய பழக்க வழக்கங்கள் உலகில் தோன்றிய விதமும், அவைகளின் உண்மைத் தத்துவங்களும் இதில் வெகு விளக்கமாய் ஆராயப்பட்டிருக்கின்றன.

வெளியீடு 3 :—பழங்கால இந்திய விக்ஞானம்:— புராதன காலத்தில் இந்தியாவில் விக்ஞான சாஸ்திரப் பரிச்சயம் எந்த அளவுவரை எட்டியிருந்தது என்பதைச் சுருக்கமாகக் கூறும் நூல். (தினமணி 23-3-41)

வெளியீடு 4 :—சுதந்திர இந்திய அரசியல்:—இந்திய நாடு விடுதலையடைந்தால் அரசுரிமை எப்படி நடத்தும்? இந்திய விடுதலையால் இந்நாட்டு மக்கள் என்ன பயனைப் பெறுவார்கள்? என்ற விஷயங்கள் இதில் பழங்கால ஆதாரம் கொண்டு கூறப்பட்டுள்ளது.

உரைகள்

தங்கள் நன்னெறிக்கழக வெளியீடுகள் அறிவுக்கு விருந்தாய் மிளிர்கின்றன. தமிழர்கள் அனைவரும் தங்கள் கழகத்தை ஆதரிக்கவேண்டுமென்று மனப்பூர்த்தியாய் விரும்புகின்றேன்.

(ஒப்பம்) சோமதத்தன், லாகூர்.

தங்கள் கழக வெளியீடுகள் ஒருமுறை யன்றிப் பன்முறைப் படித்து மகிழவேண்டியவைகள்.

(ஒப்பம்) வேணுகோபால், வேலூர்.